"ராம! நான் மஹாதீனன், தாங்களோ தீனரக்ஷகன் எனக்குத் தாங்கள் தோழனானதால் தங்களிடத்தில் முறையிட்டு அழுகிறேன் அக்னிஸாக்ஷியாக எனக்குக் கைகொடுத்திருப்பதால் தாங்கள் என் மித்திரனல்லவா? என் உயிரைக் காட்டிலும் தாங்கள் எனக்கு அருமையானவர்கள் ஸத்தியத்தின்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நான் இதுவரையில் என் மனதில் அடக்கிக்கொண்டிருந்த துக்கத்தைத் தோழனென்ற பாத்தியத்தால் வெளியிட்டுச் சொல்லுகிறேன். அது என் ஹிருதயத்தைப் பிளந்துகொண்டிருக்கிற"தென்று சொல்லிக் கண்ணீர் பெருக, வேறொன்றும் பேசமுடியாமல் தத்தளித்தான். "எனக்கு இவன் எவ்வளவோ தைரியத்தை உபதேசித்து, தானே இப்பொழுது துக்கத்தை அடக்கமுடியவில்லையென்று ராமன் எண்ணுவாரே"யென்று வெட்கப்பட்டு, வேகமாக ஓடும் வெள்ளத்தைப்போன்ற கண்ணீரைத் தைரியத்தால் அடக்கிக் கண்களைத் துடைத்துக்கொண்டு பெருமூச்சுவிட்டு, ராமனைப் பார்த்து "பலவானான வாலி என்னை ராஜ்யத்திலிருந்து துரத்திக் கடுமையான வார்த்தைகளால் நிந்தித்தான் பிராணனைக் காட்டிலும் பிரியமான என் பார்யையையும் எடுத்துக்கொண்டான், என் நண்பர்களையும் சிறையிலடைத்தான். என்னைக் கொல்லவேண்டுமென்று வழிதேடிக்கொண்டிருக்கிறான் அதற்காக அவனால் அனுப்பப்பட்ட பல வானரர்களைக் கொன்றேன் அந்த ஸந்தேஹத்தால் தங்களைக் கண்டபொழுதும் வெளியில் வரப் பயந்து ஒளிந்திருந்தேன் அருண்டவன் கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேயல்லவா? இதோவிருக்கும் ஹனுமான் முதலியவர்களே எனக்குத் துணை இவ்வளவு கஷ்டமடைந்தும் நான் பிழைத்திருப்பது இவர்களாலேயே இந்த மித்திரர்கள் எப்பொழுதும் என்னோடிருந்து நான் போகுமிடமெல்லாம் கூடவந்து என்னை வெகு ஜாக்ரதையுடன் காப்பாற்றுகிறார்கள் என் வரலாறு இதே சுருக்கிச் சொன்னேன். வளர்த்துவதில் என்ன ப்ரயோஜனம்? என் அண்ணன் வாலி எனக்குச் சத்ரு. மஹாபராக்ரமசாலியென்று பெயர்

பெற்றவன அவனைக் கொன்றால என துக்கம் தீரும சுகமாக வாழவேன ஸுக்கததிலும துக்கத்திலும தோழனைத தவிர வேறு கதியிலலை'' யென்று தெரிவித்தான

ராமன "உங்களுக்கு விரோதமுண்டான காரணத்தை நிஜமாகச சொல அதைக் கேட்டுப பலாபலங்களை விசாரித்து, நீ ஸவலப அபராதஞசெயது அதற்காக அவன உனனைக கடுமையாகத தண்டித்திருந்தால அவனை இபபொழுதே கொலலுகிறேன அலலது நீ பெரிய அபராதஞ செயது அதற்காக அவன ஸ்வலபமாக தண்டித்திருந்தால, உங்களுக்குள ஸமாதானஞ செயவிக்கிறேன் எபபடியாவது உனக்கு க்ஷேமத்தைச செய்வது என கடமை அவன உன்னை இபபடி அவமானஞ செயததைபபற்றி எனக்குக கோபம பொங்குகிறது மழைககாலத்தில் ஆற்றின வேகத்தைபபோல அடக்க முடியவிலலை ஆகையால நான கோதண்டத்தை வளைதது நாணேற்றுவதற்குள உணமையைச சொல வாலியைக கொன்ற பிறகு நீ துக்கப்படுவதில பரயோஜனமிலலை. (ராமன இங்கே சொனனபடியே பிறகு நடநதது) நான பாணத்தை ப்ரயோகித்த மறுநிமிஷத்திலேயே அவன இறந்தானென்றறி'' யென்றார்

அதைக கேட்டு ஸுக்ரீவனும அவனுடனிருந்த நானகு வானரர்களும அளவற்ற ஸநதோஷமடைநதாரகள •பிறகு அநத வானரராஜன தனக்கும வாலிக்கும விரோதமுண்டான காரணத்தை உணமையாகச சொலல ஆரமபித்தான

ஸாக்கம 9

வாலி மாயாவியைக் கொன்றது.

"ராம! என அணணன வாலி மஹாபலவான. என பிதாவிற்கு அவனிடத்தில வெகு பரீதி எனக்கும ஆரமபததில அபபடியே. என பிதா இறநதபிறகு மநதரிகள அவனை வானரர்களுக்கு அரசனாக அபிஷேகஞ செயதாரகள அது எலலோருக்கும இஷ்டமே எங்கள பூர்விக ராஜ்யத்தை வாலி நயாயமாகஆணடுவநதகையில நான எபபொழுதும அவனிடத்தில வணக்கமாகவும வேலைககாரனைப போலும நடநதுவநதேன.

“ஒரு ஸமயததில மயனுடைய புதரனும துநதுபிககு மூததவனு மான மாயாவியெனபவனுக்கும வாலிககும ஒரு பெண்ணைபபறறி விரோதமுணடாயிறறு ஒருநாள இரவில கிஷகிநதையில எலலோ ரும தூஙகிககொணடிருககுமபொழுது அநதத துஷடன கோட்டை வாசலிலவநது காஜிததது வாலியை யுதததறகு அழைததான ஸு கமாயத தூஙகிககொணடிருநத வாலி அதைக கேடடுப பொறுக்கா மல அவனைக கொலல அதிவேகமாக வெளியில வநதான அவனு டைய பாரயைகளும நானும வெகு வணககமாக அவனைத தடுததும அவன எஙகளை உதறிவிடடு மஹாகோபததுடன யுததததிறகுப போனுன அபபொழுது நான அவனிடததிலுளள பரியத தால அவனைப பின தொடாநதேன. வாலியும நானும வரு வதை மாயாவி தூரததிலேயே கணடு பயநது ஓடினுன. அபபொழுது சநதரோதயமாகி பரகாசமாகவிருநததால அவனைத துரததிககொணடு போனேம. பிறகு அநத அஸுரன புலலால மூடபபடட ஒரு பெரிய குஹையில திடீரெனறு பாயநது மறைந தான அதைக கணடு கோபஙகொணடு வாலி எனனைப பாரதது “ஸு கரீவ! நான அநதத துஷடனை வெகு சீகரததில கொனறுவிடடு வருகிறேன, அதுவரையில இஙகேயே இரு” வெனறுன. நானும வருகிறேனெனறு பராரததிததேன வாலி அதறகு ஸமமதிககாமல எனனை அவவிடததிலேயே இருககுமபடி தன பாதஙகளைத தொட்டு பரமாணஞ செயயசசொலலி அநத குஹையில புகுநதான நானும அஙகே ஒரு வருக்ஷமவரையில காததுககொண்டிருநதேன அப பொழுதும அவன திருமபி வராததால அவனுககு எனன அபாயம நோநததோவெனறு வருநதி அவன இறநதானெனறே நினைததேன.

அநதக குஹையிலிருநது ரகதவெளளம நுரையுடன ஓடி வநதது. அஸுரரகளின காஜனையும கேடடது வாலி அஸுரரகளால கொலலபபடடானெனறே நினைததேன பிறகு மலையைபபோனற ஒரு கறபாறையால அநதக குஹையின வாசலை மூடிவிடடு, வெகு துககததுடன அவனுககுத தாபபணம முதலிய உததரகரியைகளைச செய்து முடிததுவிடடு, கிஷகிநதைககுத திருமபி வநதேன வாலி இறநததை ஒருவரும அறியாமல வெகு ஜாகரதையாக மறைததுவை ததேன; மநதரிகள அதை எபபடியோ அறிநது, நான விருமபாவிட டாலும எனனை அரசனுகவிருககுமபடி நிரபபநதிததாரகள. அப படியே நான நயாயமாக அரசாண்டுவருகையில வாலி அநத அஸுரா களைக கொனறுவிடடுக கிஷ்கிநதைககு வநதான தன ஸதானததில நான இருபபதைக கணடு கோபததால கண சிவநது என மநதரி

களைச் சிறையில் போட்டு, என்னையும் கடுமையாகக் கோபித்தான். தெரியாத்தனத்தால் செய்துவிட்டேனென்று நான் எவ்வளவு பிரார்த்தித்தும் என்னைத் தள்ளிவிட்டான் குடிகள் எனக்கு அனுகூலமாக இருந்தபடியால் நான் அந்தப் பாபியைத் தண்டிக்க முடியும் ஆனாலும் அவன் என் அண்ணன் அப்படிச் செய்ய இஷ்டமில்லை நகரத்தில் அவன் வந்தபிறகும் நான் அவனுக்கு ஸகல மர்யாதை செய்து நமஸ்கரித்து, அவனுடைய பாதங்களில் என் தலையை வைத்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன் அவனுக்குக் கோபம் தணியவுமில்லை ஸந்தோஷமாக என்னை ஆசீர்வதிக்கவுமில்லை.

ஸர்க்கம் 10

ராமன் ஸுக்ரீவனுக்கு அபயங்கொடுத்தது.

பிறகு என்னால் கூடியவரையில் அவனை ஸமாதானஞ் செய்தேன். "அண்ணா! தாங்கள் சத்ருவைக் கொன்றுவிட்டு க்ஷேமமாக வந்து சேர்ந்தது என் பாக்யம் அநாதையான எனக்குத் தாங்களே நாதன். வெண்குடை சாமரம் முதலிய ராஜோபசாரங்களை நான் தங்களுக்குச் செய்யும்படி உத்தரவு கொடுக்கவேண்டும் ஒரு வர்ஷம் வரையில் அந்தக் குஹை வாசலில் கவலையுடன் காத்துக்கொண்டிருந்தேன். பிறகு அதிலிருந்து ரக்தவெள்ளம் வரக்கண்டு பயந்து தங்களுக்கு ஏதோ அபாயம் நேர்ந்ததென்று மிகவும் துக்கமடைந்து ஒரு மலைச் சிகரத்தால் அந்த வழியை மூடிவிட்டு கிஷ்கிந்தைக்குத் திரும்பிவந்தேன் தங்களுக்கு நேர்ந்த கஷ்டத்தால் நான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில் மந்திரிகளும் பட்டணத்து ஜனங்களும் என்னைப் பலவந்தம் செய்து அரசனாக நியமித்தார்கள் அந்த அபராதத்தை மன்னிக்கவேண்டும் அரசனாக இருக்கத் தகுந்தவர்கள் தாங்களே. நான் முன்போல் யுவராஜாவாக இருக்கிறேன் தாங்கள் இல்லாததால் தங்களுடைய அதிகாரத்தை நடத்திவந்தேன் என்னிடத்தில் ஒப்புவித்த ராஜ்யத்தை யாதொரு அபாயமின்றித் தங்களிடத்தில் மறுபடியும் ஒப்புவித்துவிட்டேன். மஹா பராக்ரமமுள்ள தாங்கள் என்னிடத்தில் கோபிக்கக் கூடாது. தயவு செய்யவேண்டும் கைகூப்பித் தங்கள் பாதங்களில் நமஸ்கரிக்கிறேன். அரசனில்லாமல் ராஜ்யம் அழிந்துபோமென்று

மந்திரிகளும் நகரத்து ஜனங்களும் என்னை நிர்ப்பந்தித்து ஸிம்ஹாஸனத்தில் வைத்தார்கள்" என்று விநயமாகத் தெரிவித்தேன்.

அவன் என்னைக் கோபத்துடன் அதட்டிச் "சீசீ" யென்று சொல்லக்கூடாத வார்த்தைகளைச் சொல்லித் தூஷித்தான். பிறகு மந்திரிகளையும் ப்ரஜைகளையும் தருவித்து அவர்களுக்கெதிரில் என்னைப் பார்த்து "ஒருநாள் ராத்திரியில் மாயாவியென்ற அஸுரன் காலங்குறுகி என்னைச் சண்டைக்கு அழைத்தானென்று உங்களுக்குத் தெரியுமே. அதைக் கேட்டு அவனுடன் யுத்தஞ்செய்ய இங்கிருந்து புறப்பட்டேன். இந்தத் த்ரோஹி அப்பொழுது என்னுடன் வந்தான். மாயாவி நாங்கள் வரக்கண்டு பயந்தோடினான். நாங்களும் அவனைத் துரத்திக்கொண்டு போனோம். திடீரென்று அவன் ஒரு குஹையில் மறையக்கண்டு 'நான் கிஷ்கிந்தைக்குத் திரும்பிப் போனால் என் கீர்த்திக்குக் குறைவு வரும் ஆகையால் நான் இந்தக் குஹைக்குள் போய் அவனை அதிசீக்ரத்தில் கொன்றுவிட்டு வருகிறேன் அதுவரையில் நீ இங்கேயிரு' வென்று கட்டளையிட்டேன். இவன் அங்கேயே இருப்பானென்று நம்பி, அந்தப் பயங்கரமான குஹையில் ப்ரவேசித்து, ஒரு வர்ஷம்வரையில் அவனைத் தேடினேன். முடிவில் அவனைக் கண்டு பிடித்து, அவனுடைய பந்துக்களுடன் கொன்றேன். அவன் கோரமாயக் கர்ஜித்துக்கொண்டு இறக்கும் ஸமயத்தில் அவனுடைய வாயிலிருந்து பெருகின ரத்தத்தால் அந்தக் குஹை நிறைந்தது. இப்படித் துந்துபியின் புத்ரனான மாயாவியைக் கொன்றுவிட்டு அந்தக் குஹையிலிருந்து வெளியில் வருகையில், த்வாரம் அடைபட்டு வழிதெரியாமலிருந்தது. 'ஸுக்ரீவா!' வென்று பல தடவை கூப்பிட்டும் யாதொரு பதிலுமில்லை. நான் வருத்தமடைந்து பலதடவை கால்களால் அந்தக் கல்லை இடித்துத் தள்ளி, அந்த வழியால் நகரத்திற்குத் திரும்பி வந்தேன். இந்தக் க்ரூரன் என் ராஜ்யத்தில் ஆசைவைத்து ஸஹோதரனிடத்தில் வைக்கவேண்டிய மர்யாதையையும் மறந்து என் ஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டா னென்று சொல்லிக், கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் என்னை ஒற்றை வஸ்த்ரத்துடன் அங்கிருந்து அடித்துத் துரத்தினான். நான் ராஜ்யத்தையும் பார்யையுமிழந்து, அவனுக்குப் பயந்து இந்தப் பூமி முழுவதும் ஓடித் திரிந்தேன். இந்த ரிச்யமூக பர்வதத்தில் வாலி வரமாட்டானென்று தெரிந்து இங்கே வந்து ஒளிந்துகொண்டேன். யாதொரு அபராதமுஞ் செய்யாத எனக்கு இவ்வளவு கஷ்டங்களும் நேர்ந்த விதத்தையும் வாலிக்கும் எனக்கும் உண்டான விரோத கார

ணத்தையும் தெரிவித்தேன். ஸகல ப்ராணிகளும் தங்களுடைய பராக்ரமத்தைக் கண்டு நடுங்குகின்றன. வாலியிடத்தில் பயந்திருக்கிற என்மேல் கிருபைசெய்து அவனைக் கொல்லவேண்டு"மென்றான்.

அதைக் கேட்டுத் தாமாதவான ராமன் புன்சிரிப்புடன் "ஸுக்ரீவ! இதோ என்னிடத்திலிருக்கும் பாணங்கள் ஸூர்யனைப் போல ஜ்வலிக்கின்றன. வீண்போகாத இந்தக் கூர்மையான சரங்கள் அதிவேகமாய் வாலியின் மார்பில் துளைக்கும். உன் பார்யையை அபஹரித்த அந்தத் துராத்மா என் கண்ணில் படும்வரையில் ஸுகமாக ஜீவிக்கட்டும். நானும் உன்னைப்போல கஷ்டப்பட்டவன், அந்த வருத்தத்தைப் பூர்ணமாய் அறிவேன். உன்னைத் துக்க ஸமுத்ரத்திலிருந்து கரையேற்றி உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறே"னென்று தாமதத்திற்கு ஒத்த வார்த்தைகளைச் சொன்னவுடன், ஸுக்ரீவன் மிகவும் ஸந்தோஷித்துத் தனக்கு ஸகல கார்யங்களும் கைகூடினதாக எண்ணினான்.

ஸர்க்கம் 11.

வாலியின் பராக்ரமம்.

ராமனுடைய வார்த்தையைக் கேட்டு ஸுக்ரீவனுக்கு ஆனந்தமும் பராக்ரமும் அதிகரித்தன. ராமனைக் கைகூப்பி நமஸ்கரித்து ஸ்தோத்ரஞ் செய்தான். "ஸ்வாமி! ப்ரளய காலத்தில் ஸூர்யன் ஜ்வலித்து ஸகல லோகங்களையும் எரிப்பதுபோல தாங்கள் கோபங் கொண்டால் தங்களுடைய ஜ்வலிக்கும் தீக்ஷ்ணமான பாணங்களால் ப்ரபஞ்சம் முழுவதையும் நாசஞ் செய்வீர்களென்பதில் ஸந்தேஹமுண்டோ?" வாலியின் ஆண்மையையும் வீர்யத்தையும் தைர்யத்தையும் எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன். தாங்கள் கவனத்துடன் கேட்டு உசிதமான கார்யத்தைச் செய்யவேண்டும்.

வாலி ப்ராஹ்மமுஹூர்த்தத்தில் எழுந்து, ஸந்த்யா வந்தனம் செய்வதற்கு நான்கு ஸமுத்ரங்களுக்கும் ஸூர்யோதயமாகுமுன் போய் வருவான், அதனால் அவனுக்குக் கொஞ்சமாவது சரமமிருக்காது. மஹா பர்வதங்களின் உச்சியில் ஏறி, அவைகளின் பெரிய சிகரங்களை ஆகாசத்தில் விட்டெறிந்து பந்தாடுவான் வனங்களிலுள்ள மஹா விருக்ஷங்களை ஓர் நிமிஷத்தில் வேருடன் பிடுங்கித் துண்டு துண்டாக ஒடித்துத் தன் பலத்தைக் காட்டுவான், இது தேஹத்தில் உட்கார்ந்த கொசுவைத் தட்டுவதைப் போல அவனுக்கு அலக்ஷ்யமான கார்யம்.

துந்துபி யென்ற அஸுரன் கைலாஸ மலையின் சிகரத்தைப் போல் பருத்து, எருமையின் ரூபத்தைத் தரித்து, தனக்கு ஆயிர யானை பலமிருக்கவேண்டுமென்று பெற்ற வரத்தால் மதங்கொண்டு கொழுப்படங்காமல், யாருடன் யுத்தஞ் செய்வோமென்று ஆலோசித்து, முடிவில் ஸமுத்ரராஜனிடத்தில் வந்தான். "என்னுடன் யுத்தஞ்செய்ய வா"வென்று மஹாகர்வத்துடன் அந்த அஸுரன் கர்ஜித்ததைக் கேட்டு, ஸமுத்ரராஜன் விசேஷ பலசாலியாயிருந்தும் தாமாத்மாவானதால், துந்துபியின் காமக்தியை ஆலோசித்து அவனுக்கு மரணம் ஸமீபத்ததை அறிந்து, "அஸுரச்ரேஷ்ட! உன்னைப்போன்ற மஹா வீரருடன் யுத்தஞ்செய்ய என்னால் ஆகுமா? உனக்குத் தகுந்த எதிரியைக் காட்டுகிறேன். வடக்கில் ஹிமவானென்று ஓர் பர்வதராஜனிருக்கிறான். அங்கே தபஸ்விகள் ஆனந்தமாய் வஸிக்கிறார்கள். அநேக சிகரங்களாலும் குகைகளாலும் நதிகளாலும் விருக்ஷங்களாலும் பள்ளங்களாலும் விளங்குகிறான். அவன் பரமசிவனுக்கு மாமனார் உன்னுடன் யுத்தஞ்செய்து உனக்கு ஸந்தோஷத்தை உண்டாக்கக்கூடியவன் அவனொருவனே" யென்றார்.

ஸமுத்ர ராஜன் தன்னிடத்தில் பயந்து இப்படிச் சாக்குச் சொல்லுகிறானென்றெண்ணி அவரை அலக்ஷ்யஞ்செய்து, வில்லிலிருந்து விடப்பட்ட பாணத்தைப்போல் அதிவேகமாய் ஹிமாலயத்திற்கு வந்து, மஹாகஜங்களைப்போன்ற பெரும் பாறைகளை அந்தப் பர்வதத்திலிருந்து தன் கொம்பால் இடித்துத் தள்ளிக் கர்ஜித்து அட்டஹாஸஞ் செய்தான். அப்பொழுது அந்தப் பர்வதராஜன் வெளுத்த மேகத்தைப்போல் திவ்யரூபத்தைத் தரித்து வெளியில் வந்து "துந்துபி! ஸகல தர்மங்களையும் அறிந்த நீ இப்படி என்னை உபத்ரவிப்பது உசிதமா? நான் யுத்தப் பயிற்சியில்லாதவன். கேவலம் ஸாதுக்களான தபஸ்விகளுடன் காலங் கழிக்கிறவ"னென்றார். மஹா புத்திமானான பர்வதராஜனுடைய வார்த்தைகளைக் கேட்டுத் துந்துபியின் நேத்ரங்கள் கோபத்தால் சிவந்தன. "உன்னை ஒரு பொருட்டாயெண்ணி உன்னிடத்தில் யுத்தத்திற்கு வந்த என் புத்தியையல்லவோ நிந்திக்கவேண்டும்? போகட்டும். உனக்கு யுத்தத்தில் பழக்கமில்லையென்று ஒப்புக்கொள்ளுகிறேன். அல்லது என்னைக் கண்டு பயந்து யுத்தஞ்செய்ய இஷ்டமில்லையென்றாவது ஒப்புக்கொள்ளுகிறேன். எனக்கு ஸமமாக யுத்தஞ்செய்பவனையாவது காட்"டென்று அந்த அஸுரன் கர்ஜிக்க, ஹிமவானுக்குக் கோபமுண்டாயிற்று. தன்னை அதுவரையில்

ஒருவனும் அப்படி அவமானஞ் செய்ததில்லை. ஆனாலும் மேல் நடக்கவேண்டிய காரியத்தை உத்தேசித்துத் தன் கோபத்தை அடக்கிக்கொண்டு, "அஸுரோத்தம! கிஷ்கிந்தையில் வாலியென்ற வானர ராஜனிருக்கிறான். அவன் மஹாபுத்திமான். இந்திரனுக்கு ஸமமான பலசாலி, யுத்தத்தில் நிபுணன், உனக்கு யுத்தஞ்செய்ய விருப்பமிருந்தால் அவனிடத்தில் போ. இதுவரையிலும் அவனை எதிர்த்து ஜயித்தவர்களில்லை. தேவேந்திரனும் நமுசியும் கோரயுத்தஞ்செய்ததைப்போல், உனனிஷ்டப்படி உனக்குத் திருப்தியாகும் வரையில் யுத்தஞ் செய்வா"யென்றான்.

உடனே துந்துபி இரண்டு இடங்களிலும் தன் எண்ணம் நிறைவேறாததால் கோபமடைந்து, அதிசீக்கிரத்தில் கிஷ்கிந்தைக்கு வந்து, கோட்டை வாசலில் நின்றுகொண்டு, பூமியும் ஆகாசமும் நடுங்கும்படி துந்துபியடித்ததுபோல் காஜித்தான். கூர்மையான கொம்புகளுள்ள எருமை ரூபத்துடன், மழைக்காலத்தில் நீருண்ட மேகமானது ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதுபோல், அங்குமிங்கும் பாய்ந்து ஸமீபத்திலிருந்த விருக்ஷங்களை ஒடித்துப் பூமியைக் குளம்புகளால் பிளந்து, கோட்டை வாசலின் கதவுகளை மஹா கஜத்தைப்போல் கொம்புகளால் உடைத்தான்.

அப்பொழுது அந்தப்புரத்தில் தூங்கிக்கொண்டிருந்த வாலி அவனுடைய காஜனையைக் கேட்டு, நக்ஷத்திரங்களால் சூழப்பட்ட சந்திரனைப்போல், ஸ்திரீகளுடன் வெளியில் வந்தான். அங்கே துந்துபியின் சேஷ்டைகளைப் பார்த்துக் கோபங்கொண்டு, தெளிவாய்த் துந்துபியின் மனதில் நன்றாய்ப் படும்படி "பாதிராத்திரியில் இங்கே வந்து கோட்டை வாசலை அடைத்துக்கொண்டு ஏன் கூச்சல் போடுகிறாய்? நீ மஹாபலசாலியென்று எனக்குத் தெரியும். உன்னை மன்னித்தேன். உன்னுயிரைக் காப்பாற்றிக்கொண்டு இவ்விடம்விட்டுப் போ"வென்றான் அதைக் கேட்டுத், துந்துபி கோபத்தால் கண்கள் சிவந்து, "நீ வீரனென்று கேட்டு இங்கே வந்தேன். உன் ஸ்திரீகளுக்குமுன் இப்படி வீண்பெருமை பேசிக்கொள்வாயென்று நான் நினைக்கவில்லை. இப்பொழுதே என்னுடன் யுத்தஞ்செய். எங்கே உன் பலத்தைப் பார்ப்போம். அப்படி உனக்கு தைரியமில்லாவிட்டால், பொழுது விடியும்வரையில் என் கோபத்தை அடக்கிக்கொள்ளுகிறேன். உனக்கு இஷ்டமான ஸுகங்களை அனுபவி. உன் பந்துக்களை வருவித்து "நான் போய் வருகிறே"னென்று அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு அவர்களை ஆலிங்கனஞ்செய்து மரணகாலத்

தில் அவர்களுக்குச் செய்யவேண்டிய தானங்களைச் செய். மித்ராகளுடன் ஸந்தோஷமாய்க் காலங்கழி. கிஷ்கிந்தையை நன்றாய்ச் சுற்றிப் பார். உனக்கு ஸமானனை அரசனாக அபிஷேகஞ் செய். ஸ்திரீகளுடன் ஸகல போகங்களையும் அனுபவி. பிறகு அவர்களைப் பார்க்கமுடியாது. உன் கருவத்தையும் உயிரையும் அழிக்க வந்திருக்கிறேனென்றறி. மது பானஞ்செய்து மயங்கியிருப்பவனையும் தூங்குகிறவனையும் ஆயுதமில்லாதவனையும் உன்னைப்போல ஸ்திரீகளின் நடுவிலிருப்பவனையும் காமத்தால் புத்தி சிதறியிருப்பவனையும் கொல்லுகிறவன், கர்ப்பத்திலிருக்கும் சிசுவைக் கொன்ற பாபத்தை அடைவா"னென்றான்.

தாரை முதலிய ஸ்திரீகளை விலக்கி வாலி முன்னே வந்து அந்த அஸுரனைப் பார்த்துக் கோபத்தால் மெதுவாய்ச் சிரித்து "அடே மூட! என்னுடன் யுத்தஞ் செய்யவேண்டுமோ? அப்படி இஷ்டமிருந்தால் இதோ வித்தமாயிருக்கிறேன். நான் மயங்கியிருக்கிறேனென்று எண்ணாதே. அப்படியிருந்தாலும் வீரர்கள் யுத்தத்திற்குச் செல்லும் ஸமயத்தில் உத்ஸாஹத்தை வளர்க்கக் குடிக்கும் பானமென்று இதையறி"யென்று தன் பிதாவான தேவேந்திரனால் கொடுக்கப்பட்ட தங்கமாலையைக் கழுத்தில் போட்டுக்கொண்டு யுத்தஞ் செய்ய ஆரம்பித்தான். மலையைப்போன்ற துந்துபியின் கொம்புகளைப் பிடித்துக் கிறுகிறென்று சுழற்றிப் பூமியில் அடித்துக் கர்ஜித்தான். அதனால் அந்த அஸுரனுடைய காதுகளிலிருந்து ரத்தம் பெருகிற்று. இப்படி இருவர் ஒருவரையொருவர் ஜயிக்கவேண்டுமென்று ஆசைகொண்டு நெடுநேரம் கோரயுத்தஞ் செய்தார்கள். இந்திரனுக்கு ஸமமான பராக்ரமத்தையுடைய வாலி, கைகால்களாலும் முழங்கால்களாலும் பாறைகளாலும் மரங்களாலும் துந்துபியை அடித்தான். இப்படி அந்த அஸுரனும் வாலியும் யுத்தஞ் செய்யும்பொழுது துந்துபியின் பலம் வர வரக் குறைந்தது, வாலியின் பலம் வரவர அதிகமாயிற்று. நெடுநேரம் யுத்தஞ் செய்ததாலும் பலம் குறைந்ததாலும் களைத்த துந்துபியை வாலி உயரத் தூக்கிப் பூமியிலடித்தான். அப்படிப் பூமியில் தேய்க்கப்பட்ட அந்த அஸுரன் விழும்போதே இறந்தான். பிறகு அந்தச் சரீரத்தை வாலி தூக்கி, ஒரு யோஜனைதூரத்திற்கப்பால் வீசி எறிந்தான்.

எறிந்த வேகத்தால் துந்துபியின் வாயிலிருந்து பெருகின ரத்தம் காற்றாலடிக்கப்பட்டு மதங்கரிஷியின் ஆச்ரமத்தில் விழுந்தது. அந்த மஹாத்மா அதைப் பார்த்துக் கோபங்கொண்டு "இப்படி

ரதத மழையால என்னை அசுததஞ்செயத துஷ்டன யார்? இநத ரிய ஸ்வாதீனமின்றி கேவலம மூாககனைபபோல இப்படி என்னை அவமானஞ் செயதவன யா"ரென்று யோசிததா பிறகு வெளியில வநது பாாக்கையில மலைசசிகரததைபபோல துநதுபியின உடல அங்கே கிடககககணடாா. ஞானதிருஷ்டியால அது வாலியின காயமென்றறிநது "நான இருககும ஆசரமததை ரததவெள் ளததால அசுததஞ்செயதவன இங்கே வநதால இறக்ககடவான. இநத ஆசரமததிற்கு நானகு புறததிலும ஒருகாத தூரததிற்குள அவன வநதால நிசசயமாகச சாகககடவான துநதுபியின உடலை இபபடி விட்டெறிநது ஆசரமமரங்களை அழிததான இங்கே இருக்கும அவனுடைய மநதிரிகள இனி இங்கே தங்ககூடாது இங்கிருநது போகவேண்டும இருநதால அவாகளையும சபிபபேன என பிள்ளையைபபோல எப்பொழுதும நான பாதுகாததுவநம இநத வனததிலுள்ள பழம கிழங்கு புஷ்பம முதலியவைகளை நாசஞ் செயயவேணடியதில்லை நாளைக காலையில அநதக் குரங்குகளை இங்கே கணடால அநேக ஆயிர வருஷங்களவரையில கல்லாகும்படி சபிபபே"னென்றாா இதைக கேட்டு அங்குள்ள குரங்குகளெல்லாம் பயநது ஓடிப்போயின வாலி அவாகளைப பாாதது "மதங்காசரமததிலிருநத நீங்கள ஏன இங்கே வநதீாக"ளென்றான அவாகள நடநததைத தெரிவிததாாகள. உடனே வாலி அநத மஹாஷியிடததிற்குப போயக கைகூப்பி வணங்கி நமஸ்கரிததான அவனைத திருமபிப பாராமல அவா ஆசரமததிற்குள போயவிட்டாா தன்னைச சபிப பாரென்று பயநது மிகவும மனம வருநதி அவன அங்கிருநது வநது விட்டான அது முதல ரிசயமூகபாவததததிற்கு அவன வருவதில்லை அதைப பாாபபதற்கும விருமபுவதில்லை அவனும அவனைச சோநதவாகளும இங்கே வரமாட்டாாகளென்ற நமபிக்கையால நானும என மநதிரிகளும இங்கே வநது பயமிலலாமல வஸிககிறோம

துநதுபியின எலும்புக்கூடு மலைசசிகரததைபபோல அதோ கிடக்கிறது. வாலி பலங்கொழுப்பால அதை விளையாட்டாக வீசியெறிநதான. இதோவிருககும ஏழு ஆசசாமரங்களைப பாருங்கள். விஸ்தாரமான கிளைகளால மறைககப பட்டிருக்கின்றன. வாலி இவைகளில ஒன்றைப பிடிதது அசைபபான, எல்லாவற்றிலுமுள்ள இலைகள் உதிாநது மொட்டையாய விடும வாலியின பலததிறகோ எல்லையில்லை அபபடிப பட்டவனை யுததததில எவவாறு கொல்லப்போகிறீாக"ளென்றான

அதைக்கேட்டு லக்ஷ்மணன சிரிதது, "ராமன வாலியைக்கொல்லக கூடியவரென்று உனககு நமபிக்கையுணடாக எதைச் செயய வேணடும்? நானகு ஸமுததிரங்களையும ஒரு க்ஷணததில சுறறிவர வேண்டுமா? மலைசிகரங்களை ஆகாசததில விட்டெறிநது பநதாட வேண்டுமா? துநதுபியின உடலை வீசியெறியவேண்டுமா? சொல்" என்றா ஸுக்ரீவன "வாலி இநத ஏழு ஆச்சாமரங்களை ஒவவொன்றாய் அசைதது இலைகள உதிரச செயதிருககிறான. ராமன இவைகளிலொனறை ஒரே பாணததால துளைகக முடிநதால அவருடைய பராக்ரமததைப பாரதது வாலி யிறநதானெனறு நமபுவேன அல்லது இறநதத துநதுபியின உடலை எணணூறு முழததிற்கப்பால ஒற்றைக்காலால தூககி யெறிநதாலும போது மென்றான.

பிறகு "இப்படி நமபிக்கைக் குறைவான வார்ததைகளைச சொன்னால ஒரு வேளை ராமன வருததப்படுவாரோ"வென்று கொஞச நேரம யோசிதது அவருககு ஸநதோஷமுணடாகும்படி "வாலியோ சூரன, சூரர்களைக கொனறவன, பலபராக்ரமததில் பெயர்பெற்றவன, மஹாபலசாலி, இதுவரையில அவனை ஜயிததவர்களில்லை. தேவர்களுககும ஸாதயமில்லாத அவனுடைய ஆச்சரியச செயல்களைப பாரததிருககிறேன அவனை நினைகக நினைகக பயம மேலிட்டு ரிசயமூகப பர்வதததில வநது ஒளிநதிருககிறேன. அவன ஒருவராலும ஜயிக்க முடியாதவனென்றும எதிர்கக முடியாதவனென்றும மஹாகோபியென்றும நினைககும்பொழுது இநத ரிசயமூகப பர்வதததை விட்டுப போகத துணியவில்லை எப்பொழுதும பயநது கொணடு எவ்விடத்திலும ஸநதேஹப்பட்டுக்கொணடு இநத வனததில காலங் கழிககிறேன எனனிடததில விச்வாஸம வைதது என்னைக காப்பாற்றும இநத மநதிரிகளே எனககுத துணை என அதிருஷ்டததால தங்களைப போனற புருஷோததமனான உததம மிதரன கிடைததிருககிறார் ஹிமாலயததை அடுததது போல தங்களை அணடிச்சரணமடைநதேன ஆனாலும வாலியின பலததை நான நேரில பாரததவன, யுததததில தங்கள வீர்யததையும பராக்ரமததையும நான பாரததவனல்ல தங்களைப பரீக்ஷிககிறேனென்றாவது அவமதிககிறேனென்றாவது பயமுறுததுகிறேனென்றாவது தாங்கள ஒரு பொழுதும நினைககககூடாது அவனுடைய பயங்கரமான செய்கைகளால எனககு அதைர்யமுணடாகிறது தங்கள பொய்யாகாத சொல்லும புததியும கலங்காத தைர்யமும ரூபமுமே, நீறு பூதத நெருப்புப்போல, அளவற்ற தேஜஸ் தங்களிடததில குடிகொண்டிருப்பதைக் காட்டுகின்றன"வென்றான்.

அதைக கேடடு ராமன, நமது பராககரமததை அறியாதவனுகை யால இபபடி ஸநதேஹிககிருனெனறு புனசிரிபபுடன "தோழ, நான யுததததில வாலியைக கொலவேனெனறு நமபிககையிலலா விடடால உன ஸநதேஹததைத தீாககிறேன்"னெனருா. "நமது தோழனிடததில இபபடி நமபிககைக குறைவான வாாததைகளைச சொலலிவிடடோமே"யெனறு ஸுககரீவன வருததபபடககணடு அவனை ஸமாதானஞ செயது, துநதுபியின உடலைக கால கடடைவிரலால விளையாடடாகத தூககியெறிநதாா அது பதது யோசனைககபபால போய விழுநதது ஸுககரீவன அதைப பாாதது "ஸவாமி! இதை வாலி விடடெறியுமபொழுது ரகதமும மாமஸமும நிறைநது வெகு பளுவாகவிருநதது கொஞசம உயிருடனிருநதது. இபபொழுதோ ரகதமும மாமஸமுமினறி வெறும எலுமபுககூடாகப புலலைபபோல லேசாகவிருககிறது மேலும இதை விடடெறிநதபொழுது வாலி மதுபானஞ செயது மயஙகியிருநதான. துநதுபியுடன வெகுநேரம யுததஞ செயது களைததிருநதான. தாஙகளோ இபபொழுது பூாண பலததுடன இதை விடடெறிநதீாகள ஆகையால இதைககொணடு அதிக பலசாலி வாலியா தாங்களாவெனறு நிசசயிககமுடியாது. எலுமபுக கூடடிறகும உயிருளள தேஹததிறகுமவெகுபேதமுணடு. ஆகையால இநத ஆசசாமரததைப பிளநதால அநத ஸநதேஹம தீரும. கோதணடததை வளைததுப பாணததை விடுங்கள. அது அநதமரததைத துளைககுமெனபதில ஸநதேஹமிலலை. மறுபடியும இவனுககு நமபிககை யுணடாககவேணடுமெனற அவசியமெனன வெனறு ஆலோசிககக கூடாது அதைப பாாபபதில எனககுளள ஸநதோஷததால இபபடி வேணடுகிறேனேயொழிய, தஙகளுடைய பலததைப பரீக்ஷிபபதறகாகவலல, பரமாணமாகச சொலலுகிறேன் தேஜஸுளள பொருளகளில ஸுாயன சரேஷடன, மலைகளுககுள ஹிமாலயம சரேஷ்டம, நாறகால பராணிகளுககுள் ஸிமஹம சரேஷடம, அபபடியே பராககரம சாலிகளுககுள தாஙகளே சரேஷட" ரெனறு தெரிவிததுககொணடான.

ஸாககம் 12.

ஆசசாமரங்களைப் பிளந்தது.

பிறகு ராமன ஸுகரீவனுககு நமபிககை உண்டாகக விருமபிக கோதண்டததைக கையிலெடுதது ஸகல திககுகளும நடுங்குமபடி நாணைச செயது ஒரு கூாமையான பாணததை எயதாா. அது அநத ஏழு ஆசசா மரஙகளையும அபபாலிருநத மலையையும பிளநது, பூமியில புகுந்து கிழ ஏழு லோகஙகளையும துளைதது, கொஞச நேரததிறகெலலாம பூமியிலிருநது கிளமபி அதிவேகமாக ராமனுடைய அமபறையில வநது சோநதது.

தான ஒரு மரததைத துளைககச சொனனதறகு ஏழு மரங்களும ஒரே க்ஷணததில துளைககபபட்டதைக கண்ட ஸுகரீவன ராமபாண வேகததால திகைதது நினறான பிறகு எலலையறற ஸநதோஷமடைநது ராமனுடைய பாதஙகளில தன தலையை வைததுக கைககூபபி நமஸகரிததுப பயபகதியுடன "ஸவாமி! எலலா லோகஙகளிலுமுளள விலலாளிகளுககுள தாஙகளே சரேஷடா, அஸதர விதயையில தஙகளுககு நிகரிலலை, இநதரனையும ஸகல தேவாகளையும் பாணஙகளால விளையாட்டாகக கொலவீாகள வாலி தஙகளுககு ஒரு பொருட்டா? ஒரே பாணததால ஏழு மஹாவிருக்ஷஙகளையும மலையையும பிளநதீாகள. யுததததில தஙகளை எதிாதது நிறபவாகள யாா? மஹேநதரனைப போலும வருணனைப போலும பராககரமததையுடைய இவவிதமான உததம மிதரனை அடைநது என சோகததை விட்டேன, அடங்காத மகிழசசியடைநதேன. என தமயனெனறு பெயா பெறற பரம சததருவை இபபொழுதே கொனறு என துககததைப போககி அளவறற ஆனநதததைக கொடுககுமபடி கைககூபபிப பராாததிககிறே"னெனறான. ராமன அவனை ஆலிஙகனஞ செயது லக்ஷமணனுடைய எணணபபடி "ஸுகரீவ! கிஷகிநதைககுப போவோம நீ எஙகளுககுச சறறு முனனே போய உனனுடன பிறநதவனெனறு சொலலும வாலியை யுததததிறகழை"யெனறாா.

பிறகு அவாகள அஙகிருநது வாலியின ராஜதானிககுப் போய் அடாநத இருண்ட மரஙகளுககுபபின மறைநது நினறாாகள, ஸுக

ரீவன சற்று முனனே சென்று ஆகாசமும பூமியும நடுஙகுமபடி ஸிமஹநாதஞ செய்து வாலியை யுததததிறகு அழைததான அதைக கேட்டு மஹாபலவானன வாலி கோபஙகொண்டு ஸூரியன அஸத கிரியிலிருநது இறஙகுவதுபோல நகரததிலிருநது வெளியில வந தான.

பிறகு ஆகாசததில புதனஅஙகாரகனை எதிரததுபோல, வாலி யும ஸுக்ரீவனும கோரமாக யுததஞ செயதாரகள இடி விழுநத தைபபோல கைகளால அறைநதாரகள. வஜ்ராயுததைதபபோல கடினமான முஷ்டிகளால குததினாரகள அபபொழுது ராமன கோ தணடததை வளைததுப பாணததைப பூட்டி விடபபோகையில, வாலி ஸுக்ரீவாகள அசவினீ தேவாகளைபபோல பாாவைககு ஒரே மாதிரியாய இருநதபடியால, வாலி இவன ஸுக்ரீவன இவனென்று கணடுபிடிகக முடியவிலலை. ஆகையால வாலியின உயிரை வாங்கும பாணததை விடாமல நினறாா. இதறகுள ஸுக்ரீவன வாலியால ஜயி ககபபட்டுத திருமபிப பாாதது ராமனைக காணாமல பயநது ரிசய முக பாவததைதை நோககி ஓடினன். எலுமபுகள நொறுங்கி ரகத தாரை பெருக மிகவும களைதது வாலியால துரததப்பட்டு மதஙக வனததில ஓடி ஒளிந்துகொண்டான வாலி அதைப பாாதது ரிஷி யின் சாபத்திறகுப பயநது "இனறு உனனை விட்டேன்" னென்று கிஷ் கிநதைககுத திருமபிப போனான.

பிறகு ராமலக்ஷ்மணாகளும மாருதியும ஸுக்ரீவன இருநத விடததிறகு வநதாரகள. அவன ராமலக்ஷ்மணாகளைப் பாாதது வெட் கததால தலை குனிநது தீனமாக "ஸ்வாமி! வாலியை யுததததிறகு அழைககச சொனனீாகள, ஆசசாமரததைப பிளநது பராககரமத தைக காட்டினீாகள, முடிவில எனனைச சாகும நிலைமையில் வைத தீாகள இது தஙகளுககழகா? நான வாலியைக கொலலமாட்டேனெ னறு அபபொழுதே சொலலியிருநதால நான இதை விட்டுப போயி ருபபேனே" வெனறான

அதைக கேட்டு ராமன மனமிரஙகி "ஸுக்ரீவ! நான சொல லும காரணங்களைக கேட்டுப பிறகு கோபிககலாம. இநதப பாணத தை வாலியினமேல நான விடாமலிருநததறகுக காரணம தெரியுமா? ரூபம நடை உயரம குரல காநதி பராககரமம பாாவை பேசசு அலங் காரஙகள முதலியவைகளில வாலிககும உனககும கொஞசஙகூடப் பேதம தெரியவிலலை ஒரு வேளை தவறி உனனைக் கொனறுவிடுவே

ஞேனென்ற பயத்தால் மஹா வேகமுள்ள இந்தப் பாணத்தை விட வில்லை தெரியாமலாவது அஜாக்ரதையாலாவது நான் உன்னைக் கொன்றால் நமது காரியத்தை வேராறுத்தவனேன் மூர்க்கனென்றும் புத்திஹீனனென்றும் லோகத்தில் பேரெடுப்பேன். ஒருவனுக்கு அபயம் கொடுத்துவிட்டு அவனைக் கொல்வதைப்போல் வேறு பாபமில்லை யென்று சொல்லப்படுகிறது. நானும் லக்ஷ்மணனும் ஸீதையும் உன்னையே நம்பியிருக்கிறோம் இந்த வனத்தில் உன்னைத் தவிர எங்களுக்கு வேறு யார் கதி? ஆகையால் மறுபடியும் யுத்தஞ் செய். முன்போல நான் அலக்ஷ்யஞ் செய்வேனென்று ஸந்தேஹப்படாதே வாலி என் பாணத்தால் பிளக்கப்பட்டுத் தரையில் புரளுவதை இந்த க்ஷணத்திலேயே பார்ப்பாய் நீங்கள் யுத்தஞ்செய்யும்பொழுது நான் உன்னைக் கண்டுபிடிக்கும்படி ஒரு அடையாளத்தைச் செய்துகொள் லக்ஷ்மண! மலர்ந்த யானைப்புஷ்பங்களால் நிறைந்த இந்தக் கொடியை ஸுக்ரீவனுடைய கழுத்தில் கட்டு" டென்றார் லக்ஷ்மணன் அப்படிச் செய்ய நக்ஷத்ரங்களால் சூழப்பட்ட ஸூர்யனைப் போலும் ஸந்த்யாகாலத்தில் கொக்குகளால் சூழப்பட்ட மேகத்தைப் போலும் ஸுக்ரீவன் விளங்கினான். பிறகு ராமனுடைய வார்த்தையால் தைர்யமடைந்து மறுபடியும் அவர்களை அழைத்துக்கொண்டு கிஷ்கிந்தைக்குப் போனான்.

ஸர்க்கம் 13

ஸப்தஜனர்களின் சரித்திரம்.

பிறகு தாமாத்மாவான ராமன் வில்லை வளைத்து நாணேற்றி, ஸூர்யனைப்போல் ப்ரகாசிக்கும் பாணங்களை ஸித்தஞ்செய்து, ஸுக்ரீவனுடன் கிஷ்கிந்தைக்குப் போகப் புறப்பட்டார். லக்ஷ்மணனும் ஸுக்ரீவனும் அவருக்கு முன்னே சென்றார்கள் ஆஞ்ஜநேயரும் நளனும் நீலனும் தாரனும் பின்னே வந்தார்கள் அவர்கள் போகும் வழியில் மலர்களாலும் பழங்களாலும் வளைந்திருக்கும் மரங்களையும், தெளிந்த ஜலத்தால் நிறைந்த ஆறுகளையும், மலைக் குஹைகளையும், மலைப்பிளப்புகளையும், பொந்துகளையும், முக்யமான மலைச்சிகரங்களையும், வைடூர்யத்தைப்போல் ப்ரகாசிக்கும் இலைகளாலும் கொஞ்சம் மலர்ந்த தாமரைகளாலும் விளங்கும் ஏரிகளையும், அவைகளில் நீர்க்காக்கை அன்னம் நீர்க்கோழி சக்ரவாகம்

முதலிய பறவைகள் கூவுவதையும், இளம்புல்களை மேய்ந்துகொண்டு பயமில்லாமல் நான்கு புறங்களிலும் மிரண்டு பார்த்துக்கொண்டு நடமாடும் மான்கூட்டங்களையும், குளங்களைக் கலக்கும் பெரிய யானைகள் வெளுத்த தந்தங்களுடன் ஒண்டியாகத் திரிவதையும், வேறு சில யானைகள் ஆற்றங்கரைகளை இடிப்பதையும், வேறு சில யானைகள் நீர்த்தாரைகளால் விளங்கும் மலைகள் நடந்து வருவதைப் போலும் நீருண்ட மேகங்கள் ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதுபோலும், மதஜலம் பெருகப் புழுதியால் பூசப்பட்டு மலைச் சாரல்களை இடித்துத் தள்ளுவதையும், இன்னும் மற்ற மிருகங்களையும் பக்ஷிகளையும் பார்த்துக்கொண்டே விநோதமாய்ப் போனார்கள்

ஓரிடத்தில் அடர்ந்த சோலை ஒன்றைக் கண்டு ராமன் "ஸுக்ரீவ! ஆகாசத்தில் மேகக்கூட்டங்களைப்போல இதோ தெரியும் மரச்சோலையைப் பார்த்தாயா? வாழை மரங்களால் சூழப்பட்டு எவ்வளவு அழகு வாய்ந்திருக்கிறது! இதைப்பற்றின விசேஷமென்ன" வென்றார் ஸுக்ரீவன் "ஸ்வாமி! இது ஒரு புண்யாசரமம் பழங்கள் கிழங்குகள் புஷ்பங்கள் இங்கே வேண்டியவரையில் கிடைக்கும் ஸப்தஜனர்களென்ற ஏழு ரிஷிகள் இங்கே வஸித்தார்கள். அவர்கள் ஏழு நாட்களுக்கு ஒரு தரம் காற்றைத் தின்றுகொண்டு ஜலத்தில் தலை கீழாக நின்றுகொண்டு எழுநூறு வர்ஷங்கள் கடுந்தபஸ் செய்துகொண்டு மனித தேஹத்துடன் ஸ்வர்க்கத்திற்குப் போனார்கள் அவர்களின் மஹிமையால் தேவர்களும் அந்த ஆசரமத்தை அணுகமாட்டார்கள். பக்ஷிகள் மிருகங்கள் மற்ற ஜந்துக்கள் இதற்கு வெகு தூரத்தில் ஒதுங்கி நடமாடும் அஜாக்ரதையால் எவனாவது இங்கே புகுந்தால் அவனை மறுபடியும் காண முடியாது இங்கே இனிமையான பாட்டும் வாத்யமும் ஆட்டமும் கேட்கப்படும். திவ்ய மணங்கள் வீசும் ஹோமாக்னிகள் பரகாசிக்கும். அவைகளிலிருந்து எழும்பும் புகை புறாவின் உடலைப்போல சிவந்து, மரங்களின் நுனிகளில் கவிந்திருக்கும் மேகக் கூட்டங்களால் மறைந்திருக்கும் வைடூர்ய மலைகளைப்போல இவை காணப்படுகின்றன. ஸ்வாமி! தாங்களும் லக்ஷ்மணனும் இந்த்ரியங்களை அடக்கிக் கை கூப்பி அந்த மஹரிஷிகளைப் பக்தியுடன் வணங்குங்கள். தேஹத்தில் யாதொரு அஸௌகர்யமும் நேரா"தென்றான்

ராம லக்ஷ்மணர்கள் அப்படியே வணங்கி, அங்கிருந்து ஸுக்ரீவனுடன் வெகு தூரம் போனார்கள். முடிவில் வாலியென்ற மஹா

வீரனால ரக்ஷிககபபடட கிஷகிநதைககு அருகில வநது, அவனைக் கொலல நிசசயிதது, ஆயுதபாணிகளாக அஙகேயே காததுககொண டிருநதாாகள

ஸாககம 14

ராமன் ஸுகரீவனைத தைர்யபபடுததினது.

அநத இருணட காடடில மரங்களின மறைவில அவாகள நினறுகொணடிருககையில, ஸுகரீவன நானகுபுறஙகளிலும சுறறிப பாாததுக கடுமகோபஙகொணடு,கோரமாகக காஜிதது வாலியை யுத ததிறகுஅழைததான பெரிய மேகம பெருங காறறாலடிககபபடடுக குமுறுவதுபோல அநத ஓசை ஆகாசததைப பிளநதது பால ஸூா யனைபபோனற பரகாசததையும, ஸிமஹததைபபோனற நடையையு முடைய ஸுகரீவன மஹாதைாயசாலி, ஆயினும வாலியை நினைத துப பயநது தன மனோரதஙகளை நிறைவேறறக கூடிய ரகுவீரனைப பாாதது, "ஸவாமி! கிஷகிநதைககு வநதுவிடடோம வனததில மிருகஙகள வேடனுடைய வலையில கடடபபடடிருபபதைப்போல, வானராகள இதை எககாலததிலும ஜாகரதையாகக காபபாறறி வரு கிறாகள தஙகத தோரணஙகளாலும கொடிகளாலும அலங்கரிக கபபடடு, கோடடைச சுவாகள பயஙகரமான யநதரஙகளால காக கபபடடிருககினறன. வாலி தன புஜபலததால இதை ரக்ஷிககிறான. வஸநத காலததில கொடிகள புஷபிபபதைபபோல வாலியைக கொலவதாக ஆதியில தாஙகள செயத பரதிக்ஞையை இபபொழுது நிறைவேறற வேணடுகிறேன" என்றான

ரகுநாதன "சென்ற தடவை உன்னை அடையாளம கணடு பிடிகக முடியாததால நான வாலியைக கொலல முடியவிலலை. லக்ஷ் மணன் உன கழுததில போடடிருககும ஹாரததால இபபொழுது அந்த ஸநதேஹததிறகிடமிலலை. இநத மாலை உனகாநதியையும அழ கையும அதிகபபடுததுகிறது நக்ஷதரங்களால சூழபபட்ட ஸூர் யனைபபோல பரகாசிககிறாய என கையிலுளள இநதப பாணததால உனககும வாலிககுமுளள விரோதததையும அவனால உனககு நேரும பயததையும ஒழிககிறேன அவன எஙகே எனககுக காடடு. அவன என பாணததால ஹிருதயம பிளநது புழுதியில விழுநது

புரளுமபடி செயவதை அதிசீகரததில பாாபபாய வாலி என கண்ணில பட்டு உயிருடன கிஷகிநதைககுத திருமபிபபோனுல எனனைத தோஷமுளளவனெனறும திறமையிலலாதவனெனறும நீ வேணடியவரையில தூஷிககலாம உன எதிரிலேயே அநத ஏழு ஆசசாமரஙகளையும நான துளைககவிலலையா? அதே பாணததால வாலியை இனறு கொலவேனெனறு அறி எனககு எவவித ஆபதது நோநதாலும நான பொய சொனனதிலலை இனி ஒருககாலும சொலவதுமிலலை எபபொழுதாவது தாமததைக கைவிட விருமபுவேனு? என பரதிகஞையை நிறைவேறறுகிறேன, கவலைபபடாதே உததமமான நிலததில தகுநத காலததில விதை விதைதது நலல மழை பெயததுபோல, நான சொனன வாாததை பலிககாமல போகாது ஆகையால வாலி உனனுடன யுததஞசெயவதறகு வருமபடி ஸிமஹநாதம பணணு ஜயசீலஞன வாலி உனனுல முனனெரு தடவை சண்டைககு அழைக்கபபட்டிருககிறுன தான பலசாலியெனறு காவஙகொணடிருப்பதாலும யுததததில எபபொழுதும ஆசையுளளவனைதாலும உடனே வெளியில வருவான சதருககள தஙகளைச சணடைககு அழைபபதைச சூராகள பொறுககமாட்டாாகள வாலி தன வீாயததை நனருக அறிநதவன, மேலும ஸதரீகளுககு எதிரில சணடைககுப பினவாஙகமாட்டா”னெனருா

ஸுகரீவன பிறகு ஆகாசம பிளககுமபடி காஜிததான ராஜயததில அரசனினறிக குழபபமாக விருககையில குலஸதரீகள பரபுருஷாகளால பலவநதஞ செயது இழுககபபட்டு மிரணடு தபிபபதுபோல அநதச சபதததைக கேட்டுப பசுககள பயநது முகம வெளுதது ஓடிபபோயின யுதததில அடிபடட குதிரைகளைப போல மானகள நான்கு மூலைகளிலும ஓடி ஒளிநதன புணயமிழநது ஆகாசததிலிருநது தலைகீழாக விழும நகஷதரஙகளைபபோல பறவைகள பரகஞை தபபி விழுநதன

பிறகு ஸுகரீவன சௌாயததால தேஜஸ அதிகரிகக, பெருங காறருல மோதும அலைகளையுடைய ஸமுதரததைபபோலும மழைககாலததில இருணட மஹாமேகஙகளைபபோலும பயஙகரமாககக காஜிததான.

ஸர்ககம் 15

தாரை வாலியைத தடுததது.

ஸகல பராணிகளும கேடடு நடுஙகுமபடி ஸுகரீவன செயத காஜனை அநதபபுரததில பெணடுகளுடனிருநத வாலியின காதில விழுநதது. உடனே மயககநதெளிநது, கோபமும ரோஷமும பொஙகின ஸநதயாகாலத்தில ஸூரியனைபபோல தேஹம சிவநது, ராஹுவால பிடிககபபடட ஸூரியனைபபோல திடீரெனறு காநதியை இழநதான பயஙகரமான பறகளுடன நெருபபுககொழுநதைப போல கோபததால ஜவலிததுககொணடு, யானைகளால வேருடன பிடுஙகபபடட தாமரைகளையுடைய மடுவைபபோல சறறு நேரம கலஙகி நினறு பிறகு ஸுகரீவனுடைய காஜனையைக கேடடுப பொறுககாமல அதிவேகமாக வெளியில ஓடிவநதான அவன நடககும போது பூமி பிளநதது, தாரை அதைககண்டு பயநது திகைததது, அவனிடததிலுளள ஸநேஹததால இறுகததழுவி ஹிததததைச சொலல வாரமபிததாள. "ஆறறு வெள்ளததைப போல பொஙகும தஙகள் கோபததைத தூஙகியெழுநதவன ராத்திரியில அணிநத மாலையைக கழறறி எறிவதுபோல விலககுஙகள இபபொழுது ராததிரி நெருங்கினதால சதருககளின பலாபலததைககணடுபிடிபபது கஷடம. விடியற காலையில ஸுகரீவனுடன சணடை செயயலாம தாஙகள இபபடித திடீரெனறு புறபபடடுப போவது எனககிஷடமிலலை, நான தஙகளைத தடுபபதறகுக காரணததைச சொலலக கேளுஙகள.

"இவன முனனொரு தடவை தஙகளைச சணடைககழைததான அபபொழுது தாங்கள கடுஙகோபததுடன் புறபபடடுப போய், அவனை அடிதது துரததினீர்கள மறுபடியும இவவளவு சீகரமாக அவன தஙகளை யுததததிறகழைபபதைப பார்ததால ஸநதேஹபபடுகிறேன அவனுடைய கர்ஜனையால வெளிபபடும காவததையும தைரியததையும உதஸாகததையும யோசிததால இதறகு ஏதோ பெரிய காரணமிருககவேணடுமெனறு தோனறுகிறது. பிறருடைய உதவியினறி அவன் இங்கே வரமாடடானெனறு எணணுகிறேன. எநத வீரனையோ அணடி அவனுடைய ஒததாசையால தங்களை இபபடி யுததததிறகழைககிறான. இயறகையாகவே நிபுணன, புததிமான,

ஒருவனுடைய வீர்யததையும நனருகப பரீக்ஷிககாமல அழைதது வரமாட்டான.

நமது குழநதை அங்கதன வனததில திரியும்பொழுது தூதாக ளால இதை அறிநதான அயோதயாதிபதியின புதராகளான ராம லக்ஷமணாகள ஸுக்ரீவனுககு உதவியாகச சோநதிருககிருாகளாம். அவாகள சூராகள, யுததததில தோறகாதவாகள, இக்ஷ்வாகு குலத தினா, மஹா கீாததிசாலிகள. ராமனே யுததததில நிபுணன பரளய காலாகனியைபபோல தன தேஜஸால சதருககளை எரிபபவன. 'ஸுக்ரீவனுககு உதவுவதைபபோல எனககும என உதவககூடா' தெனருல, ஒரு பெரிய மரம தன நிழலை அண்டினவனுடைய தாபத தைப போககி, மலாகளாலும பழஙகளாலும ஸகல இநதரியஙகளை திருபதி செயவதுபோல, ராமன தனனை அணடின ஸாதுககளின தாபதரயஙகளைப போககி, ஸகல மஙகளஙகளையும அருளுகிருன. ஸுக்ரீவனுககு நாம தரோஹஞசெயததால ராமன நமமை ஸாது வெனறு ஒபபுககொளளவும மாட்டான, ரக்ஷிககவும மாடடான. தனனை அணடினவாகளுடைய யோகக்ஷேமஙகள யாவையும தானே வஹிதது, உபாயம முதல பலம அடையுமவரையிலுளள காரியஙகள யாவையும தானே செயகிறவன அவாகளில துககததால பீடிககப படுகிறவாகளுககு இவனைத தவிர வேறு துணையிலலை எனககும இப படி வேருருவன கிடைககமாடடானேயெனருல, இபபடிப படட ரக்ஷகன இநத பரபஞசததில வேருவருமிலலை அண்டின வாகளைக காபபாறறுவதாலுண்டான கீாததியில அவன நிகரறறவன். தனனைச சரணமடைநதவாகளுககு ஸகல க்ஷேமஙகளையும கொடுகக வேணடிய லௌகிகஞானததையும சாஸதரஞானததையுமுடைய வன. ஸகல தாமஙகளையும பூரணமாக அனுஷடிபபவனெனறு பிதிருவாககு பரிபாலனததால தெரிகிறது அடியாாககு எளிய வன. பெரியமலை ஸகல தாதுக்களாலும நிறைநதிருபபதுபோல அனநத கலயாண குணஙகளால நிறைநதவன அவைகளால விளஙகும அநத மஹாபுருஷனுடைய மஹிமை அவைகளை விட மேலானது அவருடைய ஸவரூபததால அவைகளுககு விசேஷ மேன்மை ஏறபடுகிறது எநத ஸமயததிலும கலஙகாத மன தையுடையவன நீ அநத மஹாதமாவைப பகைபபது உசிதமலல. அளவறற பராகரமமுடையவன. யுததததில ஜயிககமுடியாதவன, ஆனுல, 'தனனைக காபபாறறிககொளள முடியாதவன பிறரை எப படிக காபபாறறுவான? தனககுக் கிடைககவேண்டிய ராஜயததி

விருநது தூரததபபட்டவன ஸுக்ரீவனுககு ராஜ்யததை எபபடி ஸமபாதிததுக கொடுபபான? மேலும பலவானான எனனுடன ஸநேஹஞ செயயாமல பலஹீனனான ஸுக்ரீவனுடன ஸ்நேஹஞ்செயவான்'வெனறு நினைதது அலக்ஷயஞ்செயயககூடாது தாஙகள மஹாசூரனெனறு எனககுத தெரியும். தஙகளிடததில கோஷ்டதைக குறைபபதாக எணணககூடாது தஙகள ஹிதததையே உததேசிதது, நான சொலலும யோஜனையைக கேட்டு அபபடியே செயய வேணடும. ஸுக்ரீவனை வருவிதது, அவனுககு யௌவராஜ்யாபிஷேகஞ செயவியுஙகள பலவானான தங்கள ஸஹோதரனுடன பகைகக வேண்டாம ராமனுடன ஸநேஹஞ செயவது தஙகளுககு நலமெனறு எனககுத தோனறுகிறது ஸுக்ரீவனிடததில ப்ரீதி வையுஙகள அவனிடததிலுளள விரோத புததியை நீககுஙகள உஙகளுடைய தமபியை நீஙகளே போஷிதது ஸௌகயமாக ரக்ஷிகக வேணடாமா? காட்டிலிருநதாலும நகரததிலிருநதாலும அவன தஙகளுடைய பநதுவலலவா? அவனைபபோனற பநது தஙகளுககு வேறொருவன இருபபானெனறு எணணவிலலை. அவனைக கௌரதை செயது அவனுககு வேணடிய பஹுமானஙகளைக கொடுதது ஆதரிதது, எபபொழுதும தஙகளுடைய ஸமீபததில வைததுககொளள வேணடும எலலாவறறையும மறநது தஙகளுடன சேரநது வாழவான நீஙகள எபபடி யிருநதாலும அவன உஙகளுடைய பநதுவெனறே ஜனஙகள சொலவாரகள அவனுடன ஸநேஹஞசெயவதைததவிர உஙகளுககு வேறு வழியிலலை. நான தஙகளுடைய ஹிதததைத தேடுகிறவளெனறு தஙகளுககுத தோனறினால, எனககு பரியமான காரயததைச செயய தஙகளுககு இஷடமிருநதால, என பராரததனையை அங்கீகரிதது அபபடியே நடகக வேணடும. என்னிடததில கிருபை செயது என வாரததையைத தஙகளுககு ஹிதமாக மதிககவேணடும எனனிடததில கோபிககககூடாது. மஹேநதரனுககு ஸமமான பராகரமமுளள ராமனுடன தாஙகள விரோதிபபது எனககிஷடமிலலை" யெனறு தாரை சொனன ஹிதோபதேசம வாலிககு மிகவும வெறுபபாகவிருநதது. காலபாசததால கட்டபபட்டு மரணம ஸமீபிததவனுககு விபரீத புததி தோனறுவது ஆசசரியமா?

ஸாககம 16

வாலி வதம.

பூரணசநதரனைபபோல அழகான முகததையுடைய தாரை இபபடிச சொலலக கேடடு, வாலி அவளை அதடடி, "பரிய நாயகி! இநத ஸுகரீவன என தமபி, இபபொழுது எனககுச சதரு, மிகுநத காவததுடன அவன காஜிபபதை நான எபபடிப பொறுபபேன? யுததததில பினவாஙகாத சூராகளைச சதரு வீரவாதஞ செயது யுதததிறகழைததால, அதைப பொறுததுககொணடிருபபதைவிட உயிரை இழககலாம நீ ஸதரீயானதால பயநதவள, உனககு இநத விஷயம தெரியாது, ஸுகரீவன எனனுடன யுததஞ செயய விருமபி எனனை யுதததிறகழைககக காஜிபபதை நான பொறுககமாடடேன அவனுககு ஸுகரீவனெனறு பெயரேயொழிய, வாஸதவமாயக கழுததேயிலலாதவன

எனனை ராகவன எனன செயவாரோவெனறு நீ துககபபடவேணடாம ரக்ஷிககத தகுநதவனை ரக்ஷிபபெனறத தாமததை அறிநதவா பரம அயோககியன ஸுகரீவன அவருடைய கிருபைககுப பாததரமலல ஒருவன செயத குறறததை அறிநது, தககபடி சிக்ஷிபபவா, அபபடி நான யாதொரு குறறமும செயயவிலலை அவருககு யாதொரு அபராதமும செயயாத எனனைக கொனறு அதனால வரும பாபததை ஸமபாதிததுக கொளவாரா? இஙகிருககும ஸதரீகளை அழைததுககொணடு நீ திருமபிப போ நான இவவளவு தைாயம சொலலியும எனனைப பின தொடாகிறாயே பரம மிததிராகள இநத ஸமயஙகளில செயயவேணடிய ஹிதோபதேசததைச செயதாய எனனிடததில நீ வைததிருககும பகதியையும வெளியிடடாய ஸுகரீவனிடம யுததஞ செயயப போகிறேன கவலைபபடாதே அவனுடைய கொழுபபை மாததிரம அடககுவேனேயொழிய அவனைக கொலலமாடடேன அவனுககுப போதுமானவரையில யுததஞ செயகிறேன விருக்ஷஙகளாலும கைககுததுகளாலும பீடிககபபடடு அதிசீகரததில ஓடிபபோவான என காவததையும முயறசியையும அவன தாஙகமாடடான நீ புததிசாலியால எனககு உதவி செயததைப பறறியும எனனிடததில வைதத

அனபைப பறறியும ஸநதோஷிததேன. எனனுடைய பராணனமேல ஆணையிடடு உனனைத தடுககிறேன. நான ஜயமடையவேணடுமெ னறு ஆசீர்வாதஞ் செய்துவிடடுத திருமபிப போ, நானும ஸுகரீ வனை யுததததில ஜயிததுத திருமபி வருகிறே"னெனறுன.

அபபொழுது தாரை அவனை ப்ரியத்துடன ஆலிங்கனஞ் செயது, துககததைத தாஙக முடியாமல அழுதுகொண்டு, வாலியை மெளள ப்ரதக்ஷிணஞ்செயதாள பிறகு அவனுககு ஜயம கிடைகக வேணடியதறகாக மநதரஙகளால ஸவஸதயயனம முதலியவைகளைச செயதுவிடடுச சோகததால மயங்கி ஸதரீகளுடன அநதப்புறத திறகுச செனறுள

அபபொழுது வாலியும மஹாஸர்பபததைபபோல கோபத தால சீறிககொணடு நகரததிலிருநது வெளியில கிளமபி, சதருவைத தேடி நானகு புறஙகளிலும பாரததான தஙக நிறமுளள ஸுகரீ வன வஸதரததை இறுகக கடடிககொணடு ஜவலிககும அகனி யைபபோல வநது நிறபதைக கண்டு வாலி அடஙகாக கோபங கொணடு, தானும வஸதரததை இறுகக கடடிககொணடு விரலகளை மடககிக கைகளை உயரத தூக்கிககொணடு ஸுகரீவன மேல பாயநதான. அதைக கணடு ஸுகரீவனும விரலகளை மடககிக கொண்டு மஹா கோபத்துடன வாலியை நோககி ஓடிவநதான. உட னே வாலி அவனைப பாரததுக கணகள சிவநது, "இதோ பார. என விரலகளை இறுக மடககிககொணடு என முஷடியால உனனைக குதது வேன அது உனனுயிரை வாஙகு"மெனறுன. அதறகு ஸுகரீவ னும "இநதக குதது உன தலையில விழுநது உனனுயிரைக கொளளை கொளளு"மெனறுன. பிறகு வாலி மஹாரோஷத்துடன ஸுகரீ வனைக குததினுன. அதனுல ஸுகரீவனுடைய தேஹததிலிருநது ரகத ப்ரவாஹம மலையருவிகளைபபோல பெருகிற்று. உடனே அவன ஒரு ஆசசாமரததை வேருடன பிடுஙகி வாலியை அடிகக, அவனும வஜராயுதததால அடிபடட மஹாபர்வததைபபோல அநத அடி யைப பொறுககமாடடாமல, அதிக பாரததை ஏற்றின கபபல ஸமு தரததில அலைகளால மோதபபடுவதுபோல ததததளிததான. அவர கள பயஙகரமான பலததையும பராகரமததையு முடையவரகள. பூர ணிமையில விளஙகும சநதர ஸூரியரகளைப போனறவரகள; கோர மான சரீரததையுடையவரகள, கருடனுககு ஸமமான வேகததை யுடையவரகள, பரம சதருககள, ஒவவொருவரும எதிரி அஜாகர தையாயிருக்கும ஸமயததைப பாரததுககொணடிருபபவரகள. அ-

பொழுது வாலியின் பலமும் வீர்யமும் அதிகரித்தன. ஸுக்ரீவனு டைய வீர்யமும் பலமும் குறைந்தன. வாலியால் தன் கொழுப்ப ழிந்து பராக்ரமம் குறைவதைக் கண்டு, ஸுக்ரீவன் கோபமடைந்து, வாலியிடத்தில் தன் ஸாமர்த்யத்தையும் சாதுர்யத்தையும் பல விதமாய்க் காட்டினன் விருக்ஷங்களாலும் கற்பாறைகளாலும் வஜ்ராயுதத்தைப்போன்ற நகங்களாலும் பர்வத சிகரங்களாலும் முஷ்டிகளாலும் முழங்கால்களாலும் கால்களாலும் கைகளாலும் ஒருவர்கொருவர் சளைக்காமல் யுத்தஞ் செய்தார்கள். இந்திரனும் விருத்ராஸுரனும் எதிர்த்ததுபோல் அது பார்க்கப் பயங்கரமாயிருந் தது இரண்டு மஹாமேகங்கள் ஒன்றையொன்று தாக்கிக் காஜிப் பதைப்போல் வனத்தில் ஸஞ்சரிக்கும் அந்த வானர வீரர்கள் தேஹ மெங்கும் ரக்தம் பெருக ஒருவரையொருவர் அடித்துக் கிழித்து அதட்டினார்கள்.

ஸுக்ரீவன் வரவரப் பலங் குறைந்து அடிக்கடி திக்குகளையும் ஆவலுடன் பார்ப்பதை ராகவன் கவனித்து, அவன் துக்கப்படுவதை ஸஹிக்காமல், வாலியை வதஞ் செய்து, அவனைக் காப்பாற்றவேண்டு மென்று, அதற்கேற்ற பாணத்தைத் தேடினர் அதை எடுத்து நா ணில் வைத்துக் காதுவரையில் இழுத்துக் காலசக்ரம்போல் கோதண் டத்தை மண்டலமாய் வளைத்தார். ப்ரளய காலத்தில் காலமேகங்கள் காஜித்து அண்டங்கள் பிளப்பதுபோன்ற அந்த நாண்ணோசையால் அங்கிருந்த பக்ஷிகளும் மிருகங்களும் நடுங்கிப் பயந்து ஓடின. ராகவ னால் விடப்பட்ட பாணமானது வஜ்ராயுதம்போல் சப்தித்துக் கொண்டு மின்னலைப்போல் அதிவேகமாய் வாலியின் மார்பில் பாய்ந் தது. வாலியோ மஹாதேஜஸ்வி, மஹாவீரன், மட்டில்லாத கர்வங் கொண்டவன், ஆனாலும் காந்தியற்று ப்ரக்ஞையிழந்து, ஐப்பசி மாஸத்தில் பூர்ணிமா திதியில் தூக்கிக் கட்டப்பட்ட இந்த்ரத்வஜம் சாய்ந்ததுபோல் தரையில் விழுந்தான்.

இப்படிப் புருஷ ச்ரேஷ்டனான ராமன் தங்கக் கட்டுகளால் அலங்கரிக்கப்பட்டு அக்னிக் கொழுந்துபோல் ஜ்வலித்துக்கொண்டு சத்ருக்களின் உயிரை வாங்கும் ச்ரேஷ்டமான பாணத்தைப் ப்ரயோ கித்தார். ப்ரளய காலத்தில் வெளிப்படும் யமனைப்போலும், பரமசிவ னுடைய முகத்திலிருந்து புகையுடன் கிளம்பின அக்னியைப்போ லும் அது இந்த்ர குமாரனை வாலியின் மார்பில் விழுந்தது. மலர்ந்த அசோக விருக்ஷம் நெருப்பால் எரிக்கப்பட்டதுபோலவும், இந்த்ரத

வஜ்ரம் சாய்க்கப்பட்டதுபோலும், வாலி ரக்தம் பெருக ப்ரக்ஞையற்றுத் தரையில் விழுந்தான்.

ஸர்க்கம் 17.

வாலி ராமனைக் குற்றஞ் சாட்டினது.

யுத்தத்தில் நிபுணனான வாலி, ராம பாணத்தால் அடிபட்டு, உத்தமமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸகல அவயவங்களும் பூமியில் படும்படி, வெட்டின மரம்போலும், கயிறு தளர்ந்த இந்த்ரத்வஜம்போலும் விழுந்துகிடந்தான். சந்த்ரனில்லாத ஆகாசத்தைப்போல அவனில்லாமல் பூலோகம் ப்ரகாசிக்கவில்லை. அவன் அடிபட்டுத் தரையில் விழுந்திருக்கையிலும் அந்த மஹாத்மாவின் காந்தியாவது பல பராக்ரமங்களாவது ப்ரதாபமாவது குறையவில்லை, உயிரும் போகவில்லை. தேவேந்த்ரனால் கொடுக்கப்பட்ட ரத்னங்கள் இழைத்த தங்க மாலையானது அவனுடைய ப்ராணன்களையும் ப்ரதாபத்தையும் காந்தியையும் காப்பாற்றிற்று. ஸந்த்யா காலத்தில் ஓரங்களில் சிவப்பு வர்ணத்தால் சூழப்பட்ட மேகத்தைப்போல் அந்த ஹாரத்தால் வாலி விளங்கினான். அவனுடைய காந்தி அந்த மாலையிலும் தேஹத்திலும் அவனுயிரை வாங்கின பாணத்திலும் மூன்று வகையாய்ப் பிரிந்து ப்ரகாசித்தது. ராமனுடைய கோதண்டத்திலிருந்து ப்ரயோகிக்கப்பட்ட அந்தப் பாணம் அவனுக்கு வீரஸ்வர்க்கத்தையும் முடிவில் உத்தமமான முக்தியையும் அனுக்ரஹித்தது. "இந்தப் பாணத்தை ப்ரயோகித்தவனல்லவோ மஹாவீர"னென்று சத்ருவை மெச்சித், தேஹத்திலுள்ள வேதனையால் மெள்ள மெள்ள அவன் எங்கே யிருக்கிறானென்று ஸகல திக்குகளிலும் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜ்வாலை யடங்கிய நெருப்புப்போலும், தன் புண்யம் க்ஷீணித்த பொழுது தேவலோகத்திலிருந்து பூமியில் விழுந்த யயாதிசக்ரவர்த்தியைப்போலும், ப்ரளயகாலத்தில் தைவகதியால் ஆகாசத்திலிருந்து பூமியில் தள்ளப்பட்ட ஸூர்யனைப் போலும் ஒருவராலும் எதிர்க்க முடியாத மஹேந்த்ரனைப்போலும், மஹேந்த்ர புத்ரனான வாலி தங்க ஹாரத்தால் அலங்கரிக்கப்பட்டு, ஸிம்ஹத்தைப் போன்ற மார்பையும் நீண்டு பருத்த புஜங்களையும் தங்க நிறமுள்ள நேத்ரங்களையும் காந்தி

யால் ஜ்வலிக்கும முகததையுமுடையவனுய்த தரையில கிடபபதை ராம லக்ஷமணாகள பாாதது ஸமீபததில வநதாாகள். அபபொழுது வாலி, ராகவனையும மஹா பலவனுன லக்ஷமணனையும பாாதது, மதுர மாகவும கடுமையாகவும தாமததை அனுஸரிததிருககும வாாததை களைச சொலல ஆரமபிததான. (வாலி ராமனுடைய செய்கையைக கணடிதத வாாததைகள தாமததிறகு விரோதமிலலையெனறு வால மீகி மஹாஷியின கருததெனபதைப பலா கவனிபபதிலலை வாலி வததைதப பறறின இருவித அபிபராயங்களில வாலமீகி எதை ஆமோதிககிருரெனறு இதனுல தெரிகிறது).

"நீ தசரத சகரவாததியின புதரன, மஹா கீாததிசாலி, தா மததை அனுஷடிபபதில பரியமுளளவன, உததம குலததில் பிறநத வன. ஸதவ குணததை பரதானமாயுடையவன, மஹாதேஜஸவி; வரதங்களை அனுஷடிததவன இபபடியிருகக வேறெருவருடன யுததஞ செய்துகொணடிருநதேன; நீ இருபபதை அறியவிலலை; எனனைக கொனறதால எனன பெருமை அடைநதாய? ஸுகரீவனு டன நான யுததஞ செயதுகொண்டிருக்குமபொழுது உன பாணத தால எனனை மாாபில அடித்தாயே ராமன கருணையின ஸவருபததை முறறிலும அறிநதவனெனறும, 'ஸகலபூதஙகளுககும ஹிததததையே செயகிறவ னெனறும, தயாமூாததியென்றும, தனனை மீறி வரும உதஸாஹததை ஜயிததவனெனறும, பெரியோாகளின ஆசா ரததை அறிநதவனெனறும, செயத பரதிகஞையைத தவ ருதவனெனறும, ஸகல பராணிகளும உன சீாததியைக் கொண் டாடுகினறன. இநதரியங்களை அடககுவது சாநதி பொறுமை தாமபுததி ஸதயம பராகரமம அபராதஞசெய்தவாகளைத தண டிபபது இவை அரசாகளுககுரிய உததம குணஙகளெனறு சொலலப் படடிருககிறது நீ அரசனுனதால உனககு நனருகத தெரியும். மேற சொனன குணங்களையும தாமாதமாககளான இக்ஷவாகு வமசததில நீ பிறநதவனெனபதையும ஆலோசிதது உனனை நமபினேன தாரை எவவளவு தடுததும லக்ஷயஞசெயயாமல ஸுகரீவனுடன யுததஞ செய்ய வநதேன வநது பாாககையில உனனைக காணவிலலை. நான வேறெருவனுடன யுததஞசெயதுகொண்டு பரவசமாகவிருக்கும பொழுது நீ எனனுடன் யுத்தஞசெயயமாடடாயெனறு நிசசயித தேன. ஆனுல நீ இவவளவு துாபபுததியுடையவனெனறும தாமாத மாவைப்போல வேஷம தரிததவனெனறும, அதறகு முறறிலும விரோதமான ஸ்வபாவததை யுடையவனெனறும பாபமான ஆசா

ரத்தை உடையவனென்றும் புல்லால் மூடப்பட்ட பாழுங்கிணற்றைப்போன்றவனென்றும், ஸாதுக்களின் வேஷத்தைத் தரித்த பாபியென்றும், நீறுபூத்த நெருப்பைப்போன்றவனென்றும், தர்மத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு பிழைப்பவனென்றும் அறியாமற் போனேனே.

உன் தேசத்திலாவது நகரத்திலாவது நான் வந்து செய்த அபகாரமென்ன? உனக்காவது செய்த அவமானமென்ன? குற்றமில்லாத என்னை ஏன் கொன்றாய்? நானோ காய் கிழங்கு பழங்களைத் தின்று வனத்தில் ஸஞ்சரிக்கும் குரங்கு, உன்னுடன் யுத்தஞ்செய்ய வந்தேனா? வேறொருவருடன் சண்டைபோட்டுக்கொண்டிருக்கையில் என்னை அடித்தாய். அதர்மத்தின் அடையாளங்கள் உன்னிடத்தில் காணப்படுகின்றன, நன்றாக விளங்குகின்றன. க்ஷத்திரியகுலத்தில் பிறந்து பெரியோர்களிடத்தில் சாஸ்திரங்கள் யாவையும் கற்று ஸந்தேஹமின்றித் தர்மவானுக்குரிய அடையாளங்களைத் தரித்து இவ்விதமான கொடிய காரியத்தை எவனாவது செய்வானா? ஸகல ஜந்துக்களுக்கும் அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கிறவனென்ற பெயரை (ராம) உனக்கு வைத்தவன் யார்? நீதிசாலியான அரசர்களின் வம்சத்தில் பிறந்து, தர்மவானென்று ப்ரஸித்தி பெற்று, மஹா க்ரூரஸ்வபாவமுடைய நீ அழகான ரூபத்துடன் பூமியில் ஏன் நடமாடுகிறாய்? பிறரை மதுரமான வார்த்தைகளால் ஸமாதானஞ்செய்வது, கேட்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் கொடுப்பது, பிறர் செய்யும் அபராதங்களைப் பொறுப்பது, அண்டினவர்களைக் காப்பாற்றுவது, எந்த ஆபத்திலும் ஸத்யத்தைக் கைவிடாதது, எந்தக் கஷ்டங்கள் நேர்ந்தாலும் மனம் கலங்காமலிருப்பது, தன்னை எதிர்த்தவர்களை நாசஞ்செய்யும் பராக்ரமம், தர்மத்திற்கு விரோதமாய் நடப்பவர்களைத் தண்டிப்பதென்றவை அரசர்களின் ஸ்வபாவ குணங்களல்லவா? அப்படி நான் என்ன அபராதம் செய்தேன்? நானோ காட்டிலிருப்பவன், நீயோ நாட்டிலிருப்பவன். நானோ வானரன், நீயோ நரன். நானோ கிழங்கு காய் பழம் முதலியவைகளைத் தின்பவன், நீயோ அரசர்களுக்குரிய அன்னம் மாம்ஸம் முதலியவைகளைத் தின்கிறவன். நீயோ சக்ரவர்த்தியின் புத்ரன், நானோ பிறப்பால் உனக்கு ஸமமல்ல. உனக்கும் எனக்கும் விரோதத்திற்கு காரணமென்ன?

பூமி தங்கம் வெள்ளி முதலிய ஐச்வர்யங்களே காரணமென்று சொல்வார்கள். என்னிடத்திலும் மற்ற வானரர்களிடத்திலும் உள்ள

காய் பழம் முதலிய வஸ்துக்களில் நீ ஆசை வைத்து இப்படிச் செய்தாயா? நீதியும் அனுக்ரஹமும் உத்தம அரசர்களின் தர்மம். அநியாயமும் ஹிம்ஸிப்பதும் அல்ப அரசர்களின் தர்மம். இவ்விரண்டிற்கும் ஸம்பந்தமில்லை. அரசர்கள் இந்தத் தர்மங்களை மனம் போனபடி அனுஷ்டிக்கக்கூடாது. நீ காமத்தையே முக்யமாகவுடையவன், மஹா கோபி, கட்டுப்பாடில்லாதவன், மேற்சொன்ன இருவித தர்மங்களையும் கலந்து நடத்துகிறவன். ஒருவனைக் கொல்லவேண்டுமென்று உனக்குத் தோன்றினவுடனே யோசிக்காமல் அவனைக் கொல்லுகிறவன். தர்மத்தில் உனக்கு ச்ரத்தையில்லை. பிறருடைய பொருளைக் கைப்பற்றுவதில் ஆசையுள்ளவன். இந்த்ரியங்களை அடக்காமல் அவை போகிற வழியிலேயே விடுகிறவன். யாதொரு அபராதமும் செய்யாத என்னைக் கொன்று லோகத்தார் வெறுக்கும் கார்யத்தைச் செய்து, ஸாதுக்களின் நடுவில் என்ன சொல்வாய்? அரசனைக் கொல்லுகிறவன், ப்ராஹ்மணனைக் கொல்லுகிறவன், பசுவைக் கொல்லுகிறவன், திருடன், ப்ராணிகளைக் காரணமில்லாமல் கொல்வதில் ப்ரீதியுள்ளவன், ஈச்வரனே இல்லையென்று எண்ணுகிறவன், தமயனுக்கு விவாஹமாகாதபொழுது தான் விவாஹம் செய்து கொள்ளுகிறவன், கோட் சொல்லுகிறவன், செல்வமிருந்தும் கொடுக்காத லோபி, மித்ரர்களுக்கு த்ரோஹஞ் செய்கிறவன், குருவின் பார்யையைக் கெடுப்பவன் இவர்கள் மஹாபாபிகள் அடையும் நரகங்களுக்குப் போகிறார்கள். இதில் ஸந்தேஹமில்லை.

'க்ஷத்ரியர்களுக்கு வேட்டையாடுவது தர்மமல்லவா? காட்டு மிருகங்களில் ஒன்றான உன்னைக் கொல்வதில் தோஷமென்ன'வென்கிறாயோ? மான் புலி முதலியவைகளின் தோலைப்போல் என் தோல் ஆஸனத்திற்கு உபயோகமல்ல பட்டுப்பூச்சியின் நூலைப்போல் என் மயிர் போர்வைகளுக்கு உபயோகமல்ல. யானையின் தந்தங்களையும் எலும்புகளையும்போல் என் பல்லுகளும் எலும்பும் ஒன்றுக்கும் ப்ரயோஜனப்படாது உன்னைப்போல் தபஸ்வி தர்மத்தை அனுஷ்டிப்பவர்கள், என் மாம்ஸத்தைத் தொடமாட்டார்கள். எதற்காக என்னைக் கொன்றாய்? ஐந்து நகங்களையுடைய ப்ராணிகளுக்குள் சல்யமென்ற முள்ளம்பன்றியும், நாயைக் கொல்லும் பன்றியும், முயலும் ஆமையும் உடும்பும் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைசியர்கள் புஜிக்கத்தக்கவை தர்மத்தை அறிந்தவர்கள் என் தோலையாவது எலும்புகளையாவது தொடக்கூட மாட்டார்கள், என் மாம்ஸத்தையும் புஜிக்கமாட்டார்கள். ஒன்றிற்கும் உதவாத ஐந்து நகங்களுள்ள என்னை ஏன் கொன்றீர்?

ஸகலமும் தெரிந்த தாரை எனக்கு ஹிதத்தையும் நிஜத்தையும் சொன்னாள். புத்தி மயங்கி அவளை மீறி வந்தேன், உயிரை இழந்தேன். ச்ரேஷ்டமான நடத்தையுள்ள பதிவ்ரதைக்குச் சபல சித்தமுள்ள புருஷன் வாய்த்தது போல இந்த பூமிக்குத் தகுந்த நாதன் நீயல்ல. ரஹஸ்யமாகப் பிறருக்குக் கெடுதி செய்பவனும், பிறர்க்கு அபகாரஞ் செய்தாலேயே பிழைப்பவனும், ஹீனமான காரியங்களைச் செய்கிறவனும், சாந்தத்தையுடையவன்போல வேஷந்தரிப்பவனும் பாபியுமான நீ, மஹாத்மாவான தசரதற்குப் புத்ரனாக எப்படிப் பிறந்தாய்? ராமனென்ற மத யானை நன்னடத்தையென்ற கட்டுத்தறியை அறுத்துக்கொண்டு, ஸாதுக்களின் தர்மமென்ற எல்லையைத் தாண்டித் தர்மமென்ற மாவெட்டியை மீறி வந்து என்னைக் கொன்றது. உனக்கு க்ஷேமத்தைக் கொடுக்காததும் தகாததும் ஸாதுக்களால் தூஷிக்கப்பட்டதுமான இந்தக் காரியத்தைச் செய்தால், ஸாதுக்கள் உன்னை நிந்திப்பார்களென்று ஏன் அறியவில்லை? உனக்கு உபகாரமாவது அபகாரமாவது செய்யாமலிருந்த என்னிடத்தில் பயனின்றிக் காட்டின பராக்ரமத்தை உன் மனைவியை எடுத்துப்போன ராவணனிடத்தில் காட்டவில்லையே! எனக்கு எதிரில் நின்று என்னிடத்தில் யுத்தஞ் செய்திருந்தால் உன்னை அப்பொழுதே கொன்று யமனைத் தர்சனஞ்செய்ய அனுப்பியிருப்பேன். ஒருவன் மதுபானஞ்செய்து மயங்கித் தூங்கும் பொழுது பாம்பு கடித்ததுபோல, ஒருவராலும் எதிர்க்கமுடியாத என்னை மறைந்திருந்து கொன்றாயே?

ஸீதையைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென்று முன்னமே எனக்குச் சொல்லியிருந்தால் அன்றைக்கே செய்திருக்கமாட்டேனா? ராவணனைக் கொல்வதற்கல்லவா ஸுக்ரீவனுடன் ஸ்நேஹஞ் செய்து அவனிஷ்டப்படி என்னைக் கொன்றாய்? அதே ராவணனை யுத்தத்தில் கொன்று கழுத்தில் கயிற்றைக் கட்டி உன்னிடத்தில் இழுத்து வரமாட்டேனா? அவன் ஸீதையை ஸமுத்ரத்தின் அடியில் வைத்திருந்தாலும் பாதாளத்தில் மறைத்திருந்தாலும் நீ எனக்கு ஒரு வார்த்தை சொன்னால், முன் காலத்தில் மதுகைடபர்களால் எடுத்துப் போய்ப் பாதாளத்தில் வைக்கப்பட்ட ச்வேதாச்வதரியென்ற ச்ருதியை ஹயக்ரீவர் அவர்களைக் கொன்று மறுபடியும் பூலோகத்திற்குக் கொண்டுவந்ததுபோல, அவளை உன்னிடத்தில் கொண்டுவரமாட்டேனா?

ஸுக்ரீவன் நான் இறந்த பிறகு ராஜ்யத்தை அடையவேண்டியது ந்யாயம்? தர்ம விரோதமாக நீ என்னைச் சண்டையில் கொன்

றது அநயாயம. பிறநதவன எனறைககாவது இறககவேணடியது ஸஹஜம. நீ மறைநதிருநது எனனைக கொனறது நயாயமானால தகுநத பதில யோசிததுச சொல'' லெனறு அநத மஹாதமாவான வாலி, பாணததின வேதனையாலும நெடுநேரம பேசினதாலும வாய உலாநது, ஸூாயனைப போல பரகாசிககும ராமனைப பாாததுககொணடே பேசாமலிருநதான.

ஸாககம் 18.

ராமனுடைய பதில்.

